[4th August 1966

(b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தியில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(3) பதிவான புன்செய் நிலங்கள் :

(a) விளைச்சல் நான்கணுவாகவும் அதற்குக் குறைவாகவுமிருந்தால்.	தண்ணீர்த் தீர்வை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.
(b) விளைச்சல் நான்கணுவுக்கு மேல், ஆறணுவுக்கு மேற்படாமல் (ஆறணுவாக அல்லது அதற்குக் குறைவாக) இருந்தால்.	தண்ணீர்த் தீர்வையில் 1/4 பாகம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஒரு சர்வே எண் அல்லது சப்-டிவிஷன் சம்பந்தமாக, வருவாய்த் துறை வாரிய நிலை ஆணையின் கீழாவது அரசாங்கம் வெளியிட்டுள்ள எந்தச் சிறப்பாணைகளின் கீழாவது நிலவரி முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், தமிழ்நாடு 1965-ம் ஆண்டு நிலவரி—தண்ணீர்த் தீர்வை சர்சார்ஜ் சட்டத்தின் கீழ் சர்சார்ஜ் முழுவதும் 1375-ம் பசலியில் தள்ளுபடி செய்யப்படும். மற்ற எல்லா விஷயங்களிலும் 1375-ம் பசலிக்கான சர்சார்ஜை அரசாங்கம் 10 சதவிகிதத்திற்குக் குறைத்து, எஞ்சியுள்ள 15 சதவிகிதத்தைத் தள்ளுபடி செய்துள்ளது.

திரு. கோ. சி. மணி: தலைவரவர்களே, சென்ற முறை இந்த மன்றத்தில் இதே பிரச்னையைப்பற்றிக் கேட்ட கேள்விக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பாசன வசதியில்லாமல் தஞ்சை மாவட்டத்தில் தரிசுபட்ட நிலங்கள் 22,550 ஏக்கர் என்று சொன்னார்கள். கும்பகோணம் தாலுகாவில் குறுவைச் சாகுபடியில் தரிசு இல்லை என்று சொன்னார்கள். குறுவையில் தரிசு ஏராளம் இருக்கிறது என்று சொல்லப்பட்டபொழுது அவர்கள் அதைப்பற்றி மறு பரிசீலனை செய்வதாக உறுதி தந்தார்கள். அதுபற்றிய விவரங்கள் சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையயா : அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

நிலவரி வஜா

*81 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965–66-ல், பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலத் தீர்வை வஜா செய்ய அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எந்தெந்த மாவட்டங்களில் ?

4th August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) தர்மபுரி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை தாலூகாக்களில் வரிவஜா செய்யப்பட்டாலும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார்கள். இந்த ஆண்டு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபோது பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு கெடுபிடி, ஜப்தி போன்றவற்றையெல்லாம் செய்கிறார்கள். ஆகவே பழைய பாக்கிகளை இப்பொழுது வசூல் செய்யாமல் இருப்பதற்கு முயற்சியெடுப்பார்களா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question regarding arrears.

Groundnut crop

* 82 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether it is a fact that groundnut crop in Madurai and Ramanathapuram districts have been badly affected by drought conditions ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) In Ramanathapuram district, in Fasli 1375, the groundnut crops were badly affected only in Srivilliputhur taluk and Manamadurai Sub-taluk due to drought conditions. The yield was 2 annas and below.

In Madurai district also the groundnut crops were affected due to drought conditions. The yield was 20 per cent to 50 per cent of the normal yield in most parts of the district except in Madurai Division, where the yield was 50 per cent to 70 per cent.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி விளைச்சல் இல்லாத நிலையில் சாகுபடி செய்ய முடியாத விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது எல்லாம் புன்செய் சாகுபடி அதற்கு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம் என்ன என்ன கொடுக்க முடியுமோ அதைக் கொடுப்பார்கள்.

கிராம ரிக்கார்டுகளைக் கட்டுவதற்கு கித்தான்

* 83 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் நடந்து வருகின்ற ஜமாபந்திக் கூட்டத்தின்போது மட்டும் கிராம ரிக்கார்டுகள் பூராவும் கித்தான் சாக்கில் கட்டி தூக்கிக்கொண்டு வருவதற்கு விசேஷ காரணங்கள் ஏதேனும் உண்டா ?